## தமிழ்நாடு அரசு
## சுருக்கம்

தமிழ் வளர்ச்சி – நூல்கள் நாட்டுடைமை – புலவர் குழந்தை அவர்களின் 29 நூல்களை நாட்டுடைமையாக்கி, அவரது மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகையாக ரூ.10.00 இலட்சம் வழங்கி – அரசு ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி–பண்பாடு மற்றும் அறநிலையத் (தவ 1.2) துறை

அரசாணை(நிலை)எண்.128 நாள்: 29.06.2006.

திருவள்ளுவராண்டு,2037
விய, ஆனி 15

படிக்க:

தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கடித எண்.ந.க.11130/தமிழ்–1/2005,
நாள் 21.11.2005 மற்றும் 27.4.2006.

*****

ஆணை:

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், புலவர் குழந்தை அவர்கள் ஈரோடு மாவட்டம், ஓலவலசு என்னும் ஊரில் 1.7.2006–ல் பிறந்தவர் என்றும், அவரது தந்தை முத்துசாமி கவுண்டர், தாயார் சின்னம்மையார் என்றும், புலவர் குழந்தை 24.9.1973–ல் மறைந்தார் என்றும், அவர் தாமாகவே முயன்று படித்து தமிழில் சிறந்த புலமையுடையவர் ஆனார் என்றும், 1934–ஆம் ஆண்டில் சென்னைப் பல்கலைக் கழகத்தில் புலவர் பட்டம் பெற்றார் என்றும், அவர் 1924 முதல் 1962 முடிய 39 ஆண்டுகாலம் ஆசிரியராகவும், தலைமைத் தமிழாசிரியராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றார் என்றும், அவர் யாப்பிலக்கணம் படிக்கத் தொடங்கும் முன்னரே, அவர் பாடிய ' கன்னியம்மன் சிந்து' என்னும் சிறு நூல் அச்சாகி வெளியானது என்றும், 1935 முதலாக அவர் பள்ளிப் பாட நூல்கள் எழுதி வந்துள்ளதாகவும், அவர் எழுதிய பள்ளி இலக்கண நூல்கள் (3–11 வகுப்பு) தனிச் சிறப்புடையவை என்றும், அவர் எழுதியுள்ள 29 நூல்கள் தமிழ் இலக்கியத்திற்கு உறுதுணை புரிபவையாக அமைந்தவை என்றும், புலவர் குழந்தை அவர்கள் செய்யுள் இயற்றுவது மட்டுமல்லாமல், சிறந்த உரை எழுதுவதிலும் வல்லுநர். திருக்குறள் – குழந்தையுரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் உரை, நீதிக்களஞ்சியம் உரை முதலிய உரைகளை எழுதியுள்ளார் என்றும், அவரது வரலாற்றுப் புலமைக்குக் 'கொங்குநாடு' எனும் நூல் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்றும், மேலும் அவரின் ' தமிழெழுத்துச் சீர்திருத்தம்' என்னும் ஆராய்ச்சி நூல் மற்றும் தொல்காப்பியர் காலத்தமிழர், "பூவா முல்லை", "திருக்குறளும்–பரிமேலழகரும்" எனும் நூல்கள் புலவரின் ஆராய்ச்சித் திறனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன என்றும், எனவே, தமிழுக்குப் பெரும் வளம் சேர்த்துள்ள புலவர் குழந்தை அவர்களின் நினைவைப் போற்றும் வகையில், அவரது நூற்றாண்டு விழா 30.6.2006க்குள் ஒரு நாளில் அரசு விழாவாகக் கொண்டாடப் பெறலாம் என்றும், கீழ்க்கண்ட அவரின் படைப்புகள் அனைத்தும் நாட்டுடைமையாக்கப்பட்டு, அவரின் மரபுரிமையர்களுக்கு பரிவுத் தொகையாக

ரூ.5.00 இலட்சம் வழங்கலாம் என்றும், நூற்றாண்டு விழாவினை அரசு விழாவாகக் கொண்டாட ரூ.75,000/–ஒப்பளிப்புச் செய்யுமாறும், தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

<u>புலவர் குழந்தை எழுதியுள்ள நூல்கள்</u>

<u>(அ) செய்யுள் நூல்கள்</u>
1. இராவண காவியம்
2. அரசியலரங்கம்
3. நெருஞ்சிப்பழம்
4. காமஞ்சரி
5. உலகப் பெரியோன் கென்னடி
6. திருநணாச் சிலேடை வெண்பா
7. புலவர் குழந்தை பாடல்

<u>(ஆ) உரை நூல்கள்</u>
8. திருக்குறள்–குழந்தையுரை
9. தொல்காப்பியப் பொருளதிகாரம்–குழந்தையுரை
10. நீதிக் களஞ்சியம் உரை

<u>(இ) இலக்கண நூல்கள்</u>
11. யாப்பதிகாரம்
12. தொடையதிகாரம்
13. இன்னூல்(சூத்திரம்)

<u>(ஈ) உரைநடை நூல்கள்</u>
14. தொல்காப்பியர் காலத் தமிழர்
15. திருக்குறளும்–பரிமேலழகரும்
16. பூவா முல்லை
17. கொங்குநாடு
18. தமிழக வரலாறு
19. தமிழ் வாழ்க(நாடகம்)
20. தீரன் சின்னமலை(விடுதலை வீரன் வரலாறு)
21. கொங்கு நாடும் தமிழும்
22. கொங்குக் குல மணிகள்
23. அருந்தமிழ் விருந்து
24. அருந்தமிழ் அமிழ்து
25. சங்கத்தமிழ்ச் செல்வம்
26. ஒன்றே குலம்
27. அண்ணல் காந்தி
28. தமிழெழுத்துச் சீர்திருத்தம்
29. தீரன் சின்னமலை (நாடகம்)

//3//

2. தமிழ் வளர்ச்சி இயக்குநரின் கருத்துருவினை விழிப்புடன் அரசு ஆய்வு செய்து, புலவர் குழந்தை அவர்களின் பிறந்த நூற்றாண்டினையொட்டி தமிழ் இலக்கிய உலகுக்கும், பகுத்தறிவு சிந்தனைகளுக்கும் இவர் ஆற்றியுள்ள தொண்டுகளைப் போற்றும் வகையில் அவரால் எழுதப்பட்டுள்ள இராவண காவியம், அரசியல் அரங்கம், நெருஞ்சிப் பழம் உள்ளிட்ட செய்யுள் நூல்களையும், திருக்குறள்–குழந்தை உரை, தொல்காப்பியப் பொருளதிகாரம் – குழந்தை உரை, நீதிக் களஞ்சியம் உரை ஆகிய உரை நூல்களையும், யாப்பதிகாரம், தொடையதிகாரம், இன்னூல் (சூத்திரம்) ஆகிய இலக்கண நூல்களையும், தொல்காப்பியர் காலத் தமிழர், திருக்குறளும் பரிமேலழகரும், தமிழக வரலாறு முதலிய உரைநடை நூல்களையும் ஆகமொத்தம் 29 நூல்களை நாட்டுடமையாக்கி பரிவுத் தொகையாக அவரது மரபுரிமையினருக்கு வழங்க ரூ.10.00 இலட்சம் (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை, கீழ்க்காணும் கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:–

> "2202 – பொதுக்கல்வி – 05 – மொழிவளர்ச்சி 800 – ஏனைய செலவு – II மாநிலத் திட்டம் – JE தமிழ் வளர்ச்சிக்கான மானியங்கள், பரிசுகள் முதலியவை – தமிழ் வளர்ச்சி இயக்குநரின் பொறுப்பில் உள்ளவை – 09 – உதவி மானியங்கள்–03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான மானியங்கள்"
> (த.தொ.கு.எண்.2202 05 800 JE 0933)

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.10.00 இலட்சத்தை 2006–2007–ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு – செலவு திட்ட மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் (Revised Budget Estimate / Revised Estimate / Final Modified Appropriation ) ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய நிதி கிடைக்கும் வகையில் அனுமதிக்கப்பட்ட தொகையைப் பெற்று வழங்க தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகைக்கான பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படும்–போது, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் பட்சத்தில், அவைகளை அனுமதிக்குமாறு சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு) கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

5. மேலே பத்தி 2–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகைக்கான நிதி ஒதுக்கீட்டை 2006–2007–ஆம் ஆண்டின் திருத்திய வரவு–செலவு மதிப்பீடு / திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்திய நிதியொதுக்கத்தில் சேர்க்கத் தேவையான கருத்துருவினை உரிய நேரத்தில் நிதித்துறைக்கு அனுப்புமாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

//4//

6. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட தொகையை தமிழ்நாடு நிதி விதி தொகுப்பு I–இன், பிரிவுக்கூறு 99–ன் கீழ் முன்பணமாகப் பெறவும், மேற்குறிப்பிட்டுள்ள செலவினங்களை மேற்கொள்ளவும், உரிய பற்றுச் சீட்டுக்களின் அடிப்படையில் முன்பணத்தொகைக்கான பட்டியலை சரிகட்டவும் தமிழ் வளர்ச்சி இயக்குநருக்கு, அரசு அனுமதி அளிக்கிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.187/DS(BK)/Edn II/2006, நாள் 29.6.2006–ன் இசைவு மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.208–யுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. கற்பூரசுந்தரபாண்டியன்
சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர்,
தமிழ் வளர்ச்சி இயக்ககம்,
சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர்(வடக்கு)
சென்னை–1,
மாநில கணக்காய்வுத் தலைவர்,
சென்னை–18/35.
நகல்:
முதலமைச்சரின் அலுவலகம்,
சென்னை–9.
நிதி அமைச்சரின் முதுநிலை
நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி(கல்வி-II) துறை, சென்னை–9.
நிதி (வ.செ.பொ.II) துறை,
சென்னை–9.
இ.கோ./உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்